**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | ) | |
| Miscellaneous | .. .. | ) | **Sessions Case No. 331/2025** |
| Preliminary Register | .. .. | ) | |
| Sessions | .. .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW1** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | பாலசுப்பிரமணியன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரிகள் ஆஜர் )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **2nd day of February 2026.**

முதல் விசாரணை **:** நான் விருதுநகர் ஊரக காவல்நிலையத்தில் தலைமைகாவலராக பணிபுரிந்து வந்தேன். இதற்கு முன்பு அதே காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தபோது, கடந்த

14.12.2023 ம் தேதி காலை 6 மணிக்கு நான், மாணிக்கவாசகம் மற்றும் சார்பு ஆய்வாளர் ரமேஷ் ஆகியோருடன் பாண்டியன்நகர் தேவர்சிலை அருகே ரோந்து பணியில் இருந்தபோது, டீ கடையில் சார்பு ஆய்வாளர் சோதனை செய்து பார்த்தபோது கடையில் இருந்த குருசாமி என்பவரை சோதனை செய்தபோது கணேஷ் 701 புகையிலை பாக்கெட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். மனித உடலுக்கும், உயிருக்கும் தீங்கு விளைவிக்ககூடிய தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை இனம் தெரியாத நபரிடமிருந்து வாங்கி சுயலாபம் கருதி விற்பனைக்கு வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டார்கள். சார்பு ஆய்வாளர் புகையிலையை வைத்திருந்த குற்றத்திற்காக அவர்களை கைது செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான்**,** அது அ**.**த**.**சா**.**ஆ**.1.** என்னிடம் காண்பிக்கப்படும் கணேஷ் 701 புகையிலைதான் சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார், கணேஷ் **701** புகையிலை சா**.**பொ**.1.** பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்தோம். வழக்கு பதிவு செய்ய சார்புஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். சார்புஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

நீங்கள் தற்போது முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைதான் 161 வாக்குமூலமான சார்பு ஆய்வாளர் விசாரணை செய்ததிலும் குற்பிட்டுள்ளீர்கள் என்றால் - சரிதான். எதிரிகள் எத்தனை வருடங்களாக நீங்கள் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் டீக்கடை நடத்தி வருகிறார் என்று விசாரணை செய்தீர்களா என்றால் - அதுகுறித்து எனக்கு சரியாக தெரியவில்லை. நீங்கள் ரோந்து ணியில் இருந்தபோது உங்களுக்கு இரகசிய தகவல் எத்தனை மணிக்கு கிடைத்தது என்றால் - சார்பு ஆய்வாளருக்குதான் கிடைத்தது, அன்றைய தினம் 6 மணி ஆகும். சார்பு ஆய்வாளருக்குதான் இரகசிய தகவல் கிடைத்தது என்று உங்களுடைய 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் - சரிதான். நீங்கள் காவல்நிலையத்திலிருந்து சம்பவஇடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்பது குறித்தோ பின்பு சம்பவஇடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்பது குறித்தோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் - சரிதான் . மேற்கண்ட இரண்டு நேர்வுகளிலும் காலதாமதத்தை குறித்து எந்தவித விளக்கமும் சொல்லப்படவில்லை என்றால் - சரிதான். அதுபோன்று வழக்கு சம்பவம் எதுவும்

நடைபெறவில்லை என்று சொன்னாலும் அதனால்தான் அது குறித்து என்னால் தெளிவாக சொல்லமுடியவில்லை என்றுசொன்னால் - சரிதான்.

காவல்நிலையத்திலிருந்து ரோந்திற்கு எந்த வாகனத்தில் சென்றீர்கள் என்றால் - எங்களுடைய சொந்த வாகனத்தில் சென்றோம். சம்பவ இடத்திலேயே பகுப்பாய்வுக்கு என கைப்பற்றப்பட்ட பொருட்கள் எடுத்து தனியாக பிரிக்கப்பட்டு அறிக்கை தயார் செய்யப்பட்டதா என்றால் - அதுபற்றி எனக்கு தெரியாது. பொதுவாக காவல்நிலையத்திலிருந்து புறப்பட்டு ரோந்து பணிக்கு செல்லும்போது பொதுநாட்குறிப்பேட்டில் எங்கு ரோந்துக்கு, யார் யார் செல்கிறோம் என்ற விவரம் குறிப்பிட்டுவிட்டுதான் செல்வோம் என்றுசொன்னால் - சரிதான். அதேபோல் உங்கள் பாக்கெட் டைரியிலும் மேற்கண்டவாறு ரோந்து பணிக்கு செல்லும் விவரங்களை குறிப்பிடும் வழக்கம் உள்ளது என்றுசொன்னால் - சரிதான். சார்பு ஆய்வாளர் உங்களை விசாரணை செய்யும்போது அந்த பாக்கெட் டைரியை தாக்கல் செய்யவில்லை என்றுசொன்னால் - சரிதான். எதிரியிடம் சோதனை செய்வதற்கு அவரிடமிருந்து சம்மதம் கடிதம் எழுதிவாங்கினீர்களா என்றால் - இல்லை.

பொதுமக்கள் யாரையும் சாட்சியாக அழைத்து அவர்கள் சாட்சியம் அளிக்க வரவில்லை என்று கூறியுள்ளீர்கள் அந்த பொதுமக்களின் பெயர், விலாசம் விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் - இல்லை. சார்பு ஆய்வாளர் சாட்சியாக இருக்குமாறு தனிநபர்களை அழைத்தும் அவர்கள் சாட்சியாக இருக்க முன்வரவில்லை என்று அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எதுவும் எடுத்தாரா என்றால் - இல்லை. அவ்வாறு சாட்சியாக அழைத்தும் முன்வராததால் கிராமநிர்வாக அலுவலர் மற்றும் தலையாரியை சாட்சியாக அழைக்க அழைத்தீர்களா என்றால் - இல்லை. புகையிலை விற்பனை செய்யவதாக பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை என்றால் - சரிதான். இந்த புகையிலையை உட்கொண்டதனால் வெளிநபருக்கு உடல்நிலை குறைவோ, உயிர்சேதமோ ஏற்பட்டது என்று புகார் கொடுக்கவில்லை என்றால் - சரிதான். அதேபோல் ரோந்திற்கு சென்றவர்கள் புகையிலையை உட்கொண்டு அவர்களுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதாக புகார் கொடுக்கவில்லை என்றால் - சரிதான். உங்களது சார்பு ஆய்வாளர் இனம்தெரியாத நபரிடமிருந்து மேற்கண்ட புகையிலையை எதிரி வாங்கியதாக குறிப்பிட்டுள்ளதால் அந்த இனம்தெரியாத நபர் யார் என்று விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் - இல்லை. புகையிலை

யாரிடமிருந்து வாங்கப்பட்டதோ அந்த நபரிடம் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்று நடவடிக்கை எடுத்தாரா என்றால் - இல்லை. நீங்கள் சொன்னநேரத்தில், சொன்னவிதத்தில், சொன்னஇடத்தில் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும், சார்பு ஆய்வாளருக்கு இரகசிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை என்றும், பொருட்கள் எதுவும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றவில்லை என்றுசொன்னால் - அது சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் - சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றால் - சரியல்ல. உங்களது மேல் அதிகாரியின் வேண்டுகோளின்பேரில் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றுசொன்னால் - சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**